# பருவகால நெற் பயிர்ச் செய்கை வயல்களிற்கான மின்சார வேலிகளை ' அல்லது ' கிராமங்களிற்கான மின்சார வேலிகளை ' அமைப்பதற்கான வழிகாட்டல் குறிப்பு



- பருவகால நெற் பயிர்ச் செய்கை அல்லது நெற் பயிர்ச் செய்கை வயல்களை யானைகளின் அச்சுறுத்தல்களில் இருந்து பாதுகாப்பதற்கு பிரதேசத்தின் கமக்கார அமைப்பு அல்லது விவசாயிகள் சங்கத்தின் ஊடாக ' பருவகாலப் பயிர்ச் செய்கை வயல்களிற்கான மின்சார வேலிகளை ' அமைப்பது இதற்கு ஒரு சிறந்த மற்றும் ஒரு உறுதியான தீர்வாக இருக்கின்றது.
- ' நெற் பயிர்ச் செய்கை செய்யப்பட்டுள்ள வயல்களிற்கான மின்சார வேலிகளை ' அமைப்பது மற்றும் பராமரிப்பது முதலான செயற்பாடுகள் அனைத்தும் விவசாயிகளினுடைய முழுப் பொறுப்பாக இருக்கின்றது.
- பயிர்ச் செய்கை வயல்களினுடைய எல்லைகளிலேயே ' நெற் பயிர்ச் செய்கை செய்யப்பட்டுள்ள வயல்களிற்கான மின்சார வேலிகள் ' அமைக்கப்படும்.
- ' நெற் பயிர்ச் செய்கை செய்யப்பட்டுள்ள வயல்களிற்கான மின்சார வேலிகள் ' என்று சொல்லப்படுவது ஒரு தற்காலிக வேலியாகவே இருக்கின்றது. இந்த 'நெற் பயிர்ச் செய்கை வயல்களிற்கான மின்சார வேலிகள் ' பயிர்ச்செய்கைக் காலத்தின் ஆரம்பத்தில் அமைக்கப்படும். பயிர்ச்செய்கை அறுவடைக்குப் பின்னர் அவை அகற்றப்பட்டு அடுத்த போகப் பயிர்ச்செய்கை வரும் வரைக்கும் அந்தந்தக் கிராமங்களில் வைத்திருக்கப்பட வேண்டும்.
- ' நெற் பயிர்ச் செய்கை செய்யப்பட்டுள்ள வயல்களிற்கான மின்சார வேலிகளை ' அமைப்பதன் மூலம் உங்களுடைய நேரத்தை மிகவும் சேமித்துக் கொள்ள முடியும். அதாவது இந்த வேலியை அமைப்பதற்கு அல்லது நிறுவுவதற்கு குறைந்த பட்சம் ஒரு நாள் மற்றும் அதனை அகற்றுவதற்கு குறைந்த பட்சம் ஒரு மணித்தியாலயங்கள் மாத்திரம் தேவைப்படும்.
- உங்களுடைய பயிர்ச் செய்கை நிலங்களை அல்லது வயல்களை யானைகள் சேதப்படுத்துவதில் இருந்து விடுபட்டு உடனடி நிவாரணத்தை வழங்க உதவுவதுடன் நெல் வயல் நிலங்களைப் பாதுகாக்க வேண்டிய தேவையையும் ' நெற் பயிர்ச் செய்கை செய்யப்பட்டுள்ள வயல்களிற்கான மின்சார வேலிகளை ' அமைப்பதன் மூலம் கணிசமான அளவு குறைக்க முடியும்.
- தெரிவு செய்யப்பட்டுள்ள திட்டப் பிரதேசங்களில் அமைந்துள்ள கமநல சேவை நிலையங்களிற்கு ஊடாக சம்பந்தப்பட்ட விவசாயிகளிற்கு நெற்பயிர்ச் செய்கை வயல்களிற்கான ஒரு ' மின்சார வேலிகள் ' வழங்கப்படும்.

- பயிர்ச் செய்கை நிலங்களிற்கு மாத்திரம் அன்றி உங்களுடைய தோட்டம் மற்றும் வீடுகளிற்கும் யானைகளால் சேதம் ஏற்படுத்தப்படும் சந்தர்ப்பம் ஏற்பட்டால் அல்லது இருந்தால் கிராமத்தில் உள்ள எல்லா வீடுகளிற்கும் தோட்டங்களிற்கும் ' கிராம மின்சார வேலிகளை ' ஏனைய கிராம மக்களுடன் ஒன்றாக சேர்ந்து அமைத்துக் கொள்ளவும் அதில் இருந்து பாதுகாத்துக் கொள்ளவும் முடியும்.
- ' கிராம மின்சார வேலிகளை ' நிறுவுதல் அல்லது அமைத்தல் மற்றும் பராமரித்தல் முதலான அனைத்துப் பொறுப்புகளும் கிராம மக்களினுடையதாக இருக்கின்றது.
- ' கிராம மின்சார வேலிகள் ' நிரந்தரமான வேலிகளாக இருக்கும். அத்துடன் வீட்டுத் தோட்ட எல்லைகளில் அவ் வேலிகள் நிறுவப்படும்.
- யானைகளிடம் இருந்து முழுமையாகப் பாதுகாத்துக் கொள்வதற்கும் இரவு மற்றும் பகல் என கிராம மக்களிற்கு முழுமையான பாதுகாப்பையும் குறிப்பாக கிராமத்துள் உடனடி நேரடிப் பாதுகாப்பையும் முழுமையாக வழங்குவதற்கும் ' கிராம மின்சார வேலிகள் ' மிகப் பொருத்தமானவையாக இருக்கின்றன.
- தெரிவு செய்யப்பட்டுள்ள திட்டப் பிரதேசங்களில் அமைந்துள்ள பிரதேச செயலக அலுவலகங்களிற்கு ஊடாக சம்பந்தப்பட்ட சமுதாயத்தினருக்கு ' கிராம மின்சார வேலிகள் ' வழங்கப்படும்.
- ' மின்சார வேலிகள் ' என்ற பதத்தை அல்லது கருத்தை மேம்படுத்துவதற்கு அல்லது ஊக்கிவிப்பதற்கு காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டம் மின்சார வேலிகளை அமைப்பதற்கான அறிவு, தகவல்கள், அனுபவப் பகிர்வு மாத்திரம் அன்றி ' மின்சார வேலிகளை ' அமைப்பதற்குத் தேவையான நிதிப் பங்களிப்பையும் தற்போது வழங்கிக் கொண்டிருக்கிறது.